பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 06 திங்கட்கிழமை (20-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 54

## ★ சமஷ்டி அரசமைப்பு அடிப்படையில்

# கால தாமதம் செய்யாது அரசியல் தீர்வு காண்க!

## கொழும்பில் கல்விமான்கள் கூட்டாக வேண்டுகோள்

**கொழும்பு, ஜனவரி 20**

**சமஷ்டி அரசமைப்பு முறையின் அடிப்படையில் அல்லது உண்மையான அதிகாரப் பரவலாக்கல் முறையில், இனப்பிரச்சினைக்கு காலதாமதம் செய்யாது அரசியல் தீர்வு ஒன்றைக் காணும்படி. அரசாங்கத்திற்கும் எதிரணியில் உள்ள அரசியல் கட்சிகளுக்கும் நாம் விண்ணப்பித்துக்கொள்கிறோம்.**

**— இவ்வாறு கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்விமான்கள் விடுத்த அறிக்கையில் கேட்டிருக்கிறார்கள்.**

கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பதினொரு பேர் சேர்ந்து இன்றைய அரசியல் நிலைமை குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர். பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் முதலாவதாக ஒப்பத்தையிட்டு விடுக்கப்பட்ட நீண்ட அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு :-

யுத்தத்திற்கு மாற்று வழியாக அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சிக்கு இன்னும் காலம் பிந்திவிடவில்லை.

அமைச்சர் தொண்டமா

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஈழ அகதிகள் இன்று திருமலை புறப்பாடு

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் முதல் தொகுதியான 750 பேர் இன்று திங்கள் சென்னையில் இருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்குப் புறப்படுகின்றார்கள்.

இவர்களில் பெரும்பான்மையானோர் அரச ஊழியர்கள் என்றும், இவர்கள் அகதி முகாம்களில் தங்க வைக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## ஈழத் தமிழ் அகதிகள் பலர் தாயகம் திரும்ப மறுப்பு!

சென்னை, ஜன. 20

தாயகம் திரும்புவதற்கு, முன்னர் விருப்பம் தெரிவித்திருந்த ஈழத் தமிழ் அகதிகள் பலர் இப்போது தமது முடிவை மாற்றிக் கொண்டு விட்டனராம்.

இப்போது தாயகம் திரும்ப தாங்கள் விரும்பவில்லை என்று அவர்கள் தெரிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

வடக்கு, கிழக்கில் தொடர்ந்து சண்டை நடைபெறுவதாலும்—

மீண்டும் ஸ்ரீலங்கா அரசு நடத்தும் அகதி முகாம்களில் தாம் தங்கவைக்கப்படவிருப்பதாலும்—

அந்த முகாம்களில் தமது உயிருக்குப் பாதுகாப்பு இருக்காது என்று அவர்கள் கருதுவதாலும்—

முன்னர் விருப்பம் தெரிவித்திருந்த அகதிகளில் பலர் தற்போது அந்த முடிவை மாற்றிக் கொண்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமது உத்தியோகம் பறிபோய் விடும் என்பதற்காக அரச ஊழியர்களான சுமார் 1,200 ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பக் கூடும் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பலாலி, காரைநகருக்கு மகாசங்கத்தினர் விஜயம்!

கொழும்பு, ஜன. 20

மல்வத்தை மகாநாயக்க தேரர் வண. ரம்புக்வெல விபாஸி தலைமையில் மகாசங்கத்தினர் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் பலாலி, நாகதீபம் மற்றும் காரைநகர் பகுதிகளுக்கு விஜயம் செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

வடபகுதி இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்தினா, மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆகியோர் இப்பயணத்துக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

போர் முனைப் பிரதேசத்தில் உள்ள பதுங்குகுழிகளை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 2 கப்பல்களில் 150 பேர் இன்று நெடுந்தீவு பயணம்

கடந்த நான்கு மாதங்களாக தமது சொந்த ஊருக்குச் செல்லமுடியாது யாழ்ப்பாணத்தில் அகதி முகாம்களிலும் உறவினர்களுடனும் தங்கியிருந்த நெடுந்தீவு மக்களில் சுமார் 150 பேர் இன்று திங்கட்கிழமை கப்பல்கள் மூலம் நெடுந்தீவு செல்கின்றனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

அவர்கள் இன்று காலை யாழ்நகரில் இருந்து வாகனங்கள் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து 'குமலா', 'மெரிதல்' கப்பல்கள் மூலம் நெடுந்தீவைச் சென்றடைவார்கள். (இ-5-111)

### உடுகம்பொலவின் கீழ் இயங்கிய

## விசேட பொலீஸ் பிரிவின் ஆயுதங்கள் வாபஸ்!

கொழும்பு ஜன. 20

கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ள பிரதிப் பொலீஸ்மா அதிபர் உடுகம்பொலவின் கீழ் இயங்கிய விசேட பொலீஸ் நடவடிக்கைப் பிரிவிடம் இருந்து ஆயுதங்கள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டு விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசேட பொலீஸ் நடவடிக்கைப் பிரிவின் செயற்பாடுகள் பற்றி சிரேஷ்ட அதிகாரிகளும், மனித உரிமை இயக்க அதிகாரிகளும் கண்டித்து வந்தனர். எதிர்க்கட்சிகளும் இந்தப் பிரிவைக் கண்டித்து வந்தன.

தற்போது 57 வயதுடைய உடுகம்பொல அடுத்த ஏப்ரல் இளைப்பாற இருந்தார் என்றும், அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படாததினால், கட்டாய லீவில் செல்லும் அவர் இனி மீண்டும் பணியாற்ற வாய்ப்பு இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

# வளலாயில் நேற்று 5 படையினர் பலி!

வடமராட்சி, ஜன. 20

வளலாயில் நேற்றுக் காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய நான்கு நிமிடநேர தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இன்னும் சிலர் காயமடைந்தனர்.

காவலரண் ஒன்றில் இருந்து இராணுவத்தினர் முன்னேறி வந்த சமயம், சுமார் 100 யார் தூரத்தில் விடுதலைப் புலிகள், அவர்களை மடக்கித் தாக்கினர்.

அப்போதே 5 இராணுவத்தினரும் உயிரிழந்தனர். காயமுற்ற ஏனைய படையினர் காவலரண் பகுதிக்குத் தப்பி ஓடி விட்டனர் என்றும்—

இராணுவத்தினரிடம் இருந்து ஏ. கே. எல். எம். ஜி. ரகத் துப்பாக்கி ஒன்றும், அதற்குரிய ரம் மகஸின் ஒன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### அமைச்சரவையை ஏமாற்றினார் :

## சட்டத்தரணி பட்டத்தை லலித் இழக்க வேண்டி வரும்?

கொழும்பு, ஜன. 20

அமைச்சரவையை ஏமாற்றினார் என்ற குற்றச்சாட்டின் மீது முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியை சட்டத்தரணிகள் பட்டியலில் இருந்து நீக்கி விடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையில் கையெழுத்திட்டதற்குப் பின்னர், ஆகஸ்ட் 28 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு திரு. அத்துலத்முதலி சமுகமளித்ததுடன், அங்கு ஜனாதிபதி பிரேமதாஸா மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணைக்குச் சாதகமாக அவர் வாக்களித்தார் என்றும்—

அதன் மூலம் அவர் அமைச்சரவையை ஏமாற்றினார் என்றும் குற்றஞ்சாட்டப் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது பாருங்கோ...!

## கூட்டணி அமைப்பதில் எதிரணிகள் வெற்றி!

கொழும்பு, ஜன. 20

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சகல அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கும் கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சி வெற்றிகண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இக்கூட்டணியின் முதலாவது பொதுக்கூட்டம் நாளை மறுதினம் கொழும்பு டிமெல் பூங்காவில் நடைபெறவிருப்பதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்து கொள்ளும்படி இந்தப் பொதுக்கூட்ட மேடையில் வைத்து அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கவும் தீர்மானிக்கப்பட்டி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டாவுக்கு மிரட்டல்; அஞ்சேன் என்கிறார் அவர்!

கொழும்பு, ஜன. 20

''நாட்டின் ஐக்கியத்தையும் சுபீட்சத்தையும் கவனத்தில் கொண்டு, புலிகளுடன் பேச்சு நடத்த முற்பட்டிருக்கும் எனக்கு, சில சக்திகள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன. அந்த எச்சரிக்கைகளுக்கு நான் அடிபணியவோ, பயப்படவோ போவதில்லை. பயமுறுத்தல்களுக்கு அஞ்சி நான் தலைகுனியமாட்டேன். எச்சரிக்கை யாருக்கு விடுக்க வேண்டுமோ அவர்களுக்கு போய் எச்சரிக்கை விடுக்கும்படி நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.''

—பதுளையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையில் அமைச்சர் தொண்டமான் இவ்வாறு கூறினார்.

பதுளை மாவட்டத்தின் புதிய எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ரி. வி. சென்னனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

புலிகளை அடக்க, அழிக்க

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டமான் தமிழ்நாடு பயணம்

சென்னை, ஜன. 20

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று தமிழ்நாடு பயணமானார். [இ-எ]

## நாடாளுமன்றம் நாளை கூடும்

கொழும்பு, ஜன. 20

நாடாளுமன்றம் நாளை காலை கூடுகிறது. நான்கு தினங்கள் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நீடிக்கும்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்க வகைசெய்யும் பிரேரணை இம்மாதம் 23 ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. [த-எ]

## தொண்டா வீட்டைச் சூழ ராணுவ கொமாண்டோக்கள்

கொழும்பு, ஜன. 20

அமைச்சர் தொண்டமானின் கொழும்பு வாசஸ்தலத்தைச் சூழ ஸ்ரீலங்கா இராணுவப் படையைச் சேர்ந்த கொமாண்டோக்கள் காவல் புரிந்து வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாநகரில் ரேஸ் கோர்ஸ் அவெனியூவில் அமைச்சரின் வாசஸ்தலம் அமைந்திருக்கிறது. [உ-எ]

## ஆலையடிவேம்பில் 165 பேர் 90 ஜூன் முதல் காணோம்!

கொழும்பு, ஜன. 20

1990 ஜூன் மாதம் தொடக்கம் இதுவரை 165 பொதுமக்கள், மட்டக்களப்பு மாவட்டம் ஆலையடிவேம்பு உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து காணாமற் போய்விட்டார்கள்.

இப்படி ஆலையடிவேம்பு பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

காணாமற் போனவர்கள் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதிலும் ஆலையடிவேம்பு பிரஜைகள் குழு ஈடுபட்டிருக்கிறது. [இ-எ]

### அமெரிக்க செனட் அமைப்பின்

## ஆயுதக் கட்டுப்பாட்டு குழு தலைவர் கொழும்பு விஜயம்

கொழும்பு, ஜன. 20

அமெரிக்க செனட்சபையின் ஆயுதக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவரும், ஆளும் குடியரசுக் கட்சி செனட்டருமான செனட்டர் லாறி பிரெஸ்லர் கொழும்புக்கு விஜயம் செய்திருக்கிறார்.

செனட்டர் பிரெஸ்லர் கடந்த சனிக்கிழமை களுத்துறைக்கு விஜயம் செய்து, அங்கு ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் கலந்து கொண்டுள்ள ஜனாதிபதி பிரேமதாஸா மற்றும் பிரதமர் விஜேதுங்கா ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

செனட்டர் பிரெஸ்லர் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து விட்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

வீட்டுத் தளபாடங்கள், மெத்தைகள்; பஞ்சு, தும்பு, ஸ்பொன்ஜ் வகைகள், மெத்தை Box ஸ்பிறிங்குகள் அனைத்தும் நியாயமான மதிப்பீட்டில் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: சனி, ஞாயிறு 8மணி—4மணி வரையும். புதிய இல. 234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். [வைத்திலிங்கம் & Co. அருகாமையில்] [19385]

## மணப் பெண் தேவை

கீழ்க்காணும் மணமகன்களுக்கு மணப் பெண்கள் தேவை. எமது ஸ்தாபனத்தில் செவ்வாய் குற்றமுள்ளவரும், அற்றவரும் 30 வயது நிரம்பியவரும் U. K. இல் வசிக்கும் எக்கவுண்டன், என்ஜினியர்களுக்கு U.K. யில் பெண்கள் தேவை. தொடர்பு: ABCDE, 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி, [19392]

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு ஆண், பெண் மணமக்கள் எல்லா உத்தியோகத்திலும் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் வரவும். மங்கள ஏஜென்சி, | கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [19350]

எம்மிடம் மாற்றுத் திருமணத்தை விரும்பும் மணமக்களும், அதனை விரும்பாத மணமக்களும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பலர் இருக்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமையில் நேரில் வரவும். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19384]

## வகுப்புகள்

சங்கீதம், வீணை, வயலின் சங்கீத சபை பரீட்சைகளுக்கும், ஜி. சீ. ஈ. O/L, A/L வகுப்புகளுக்கும் கொட்டடியிலும், நல்லூரிலும் கற்பிக்கப்படும். ஆர்வம் உடையவர்கள் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் காலை 9 – 12 மணிக்குள் தொடர்பு கொள்க. 38, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (19409)

## சிறுவர் பாடசாலை

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆரம்பம்: 6-1-1992 விண்ணப்பப் படிவங்களை றிம்மர் மண்டபம், வேம்படி வீதியிலும், கில்னர் மண்டபம், வண்ணார் பண்ணையிலும் பெற்றுக்கொள்ளலாம். [சி/1323]

## அப்பியாசக் கொப்பிகள்

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள், குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகாமை] [சி/1284]

## அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

## புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

## இலக்கியப் பரிசு

1989ஆம் ஆண்டு நாடகத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெறும் நூல், அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம் பிள்ளை ரூபா 30. 10 வானொலி நாடகங்கள், ஒரு கட்டுரை. [19219]

## திருத்துனர் தேவை

அனுபவமும், ஆற்றலும் உள்ள மணிக்கூடு திருத்துனர் தேவை. நேரில் வரவும். அல்டி 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி-1300]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 06 — 08 — 1903

மறைவு: 21 — 12 — 1991

## அமரர் இரகுநாதர் சின்னையா
(கைதடி - கிழக்கு)

இன்று [20 - 01 - 1992] எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி கிழக்கு,
கைதடி.

[19411]

---

உ

# நன்றி நவிலல்

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்திய ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழாவில் எனக்கு இவ்வாண்டுக்கான இசைப்பேரறிஞர் விருதினை வழங்கிக் கௌரவித்த அகில இலங்கைக் கம்பன் கழகத்தினருக்கும், விருது வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு கௌரவம் செய்த பெருமதிப்புக்குரிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, அன்னை துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோருக்கும், விழாவில் கலந்து கொண்டு கௌரவித்த நல்லைக் குருமஹா சந்நிதானம், அந்தணப் பெருமக்கள், கலைஞர்கள், இரசிகர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்:
நாதஸ்வர வித்துவான்-
பஞ்சாபிகேசனும்,
குடும்பத்தினரும்.

'முருகபூபதி',
சங்கத்தானை,
சாவகச்சேரி.

[19395]

---

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18 — 12 — 1933

உதிர்வு: 20 — 01 — 1986

## அமரர் தம்பிராசா தளையசிங்கம்
[C. T. B. -பருத்தித்துறை]

எங்களை விட்டுப் பிரிந்து ஆறாண்டாகியும் எங்கள் இதயம் விட்டகலாத, உங்கள் ஆத்மா சாந்தியடைய, எல்லாம் வல்ல ஊரெழு வீரகத்தி விநாயகப் பெருமானை இறைஞ்சி நிற்கும்;

சகோதரிமார், மருமக்கள்.

'அம்பிகை',
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

[19367]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 03 — 11 — 1953

இறைவன் அடியில்: 30 — 01 — 1991

## இராசரத்தினம் பாலேந்திரன்
(பாலா)

திதி: 20 — 01 — 1992

கூடப் பிறந்தவர்கள் கொண்டாடி வாழ்வதற்கு
தேடப் பெருஞ்செல்வம் தேசாந்தரம் சென்றாய்
ஆண்டு பன்னிரண்டாய் அவ் ஜேர்மனி நாட்டில்
வேண்டி உழைத்தாய்
விழிகளினால் உனைக்காண காத்துக் கிடந்தோம்
கல்நெஞ்சக் காலனவன் கண்காணா வகையினிலே
கவர்ந்தானே உன்னுயிரை!
ஆண்டொன்று போனாலும் ஆறவில்லை எம் நெஞ்சு.

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரன்,
சகோதரிகள், மைத்துனர்கள், மருமகள்.

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

[19391]

---

வெளிவந்து விட்டன!

*BRIGHT* இன்

குழந்தைகளுக்கான புதிய சுற்றாடல்

# கல்வி மதிப்பீட்டு பயிற்சிகள்

ஆண்டு — 3 விலை ரூபா 22
ஆண்டு — 4 விலை ரூபா 25

மொத்தமாகப் பெற விரும்புவோர்;

பூபாலசிங்கம் புத்தகசாலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

[19394]

---

# வெளிநாட்டு தொழில் முகவர்



படத்தில் காணப்படுபவர் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு தேடித்தரும் ஒரு முகவர் ஆவார். இவரிடம் பணம் கட்டிய எவராவது விண்ணப்பதாரிகள் இருப்பின் உடனடியாக தமிழீழ காவல் துறையின் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு தகுந்த ஆவண சான்றுகளுடன் அல்லது நிரூபிக்கக் கூடிய வேறு சான்றுகள் இருப்பின் அவற்றுடன் காலை 8-00 மணிக்கும் பிற்பகல் 3-00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் சமுகம் தந்து, பொறுப்பாளரை சந்திக்குமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர். ஏற்கனவே சமுகம் தந்து வாக்கு மூலம் அளித்தவர்களுக்கு இது பொருந்தாது. ஏனையவர்கள் இன்றிலிருந்து 10 நாட்களுக்குள் சமுகம் அளிக்கவும்.

பொறுப்பாளர்,
குற்றப்புலனாய்வுப் பிரிவு,
யாழ்ப்பாணம்.

[சி/1346]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 24 — 12 — 1931

உதிர்வு: 22 — 01 — 1991

## மனுவேற்பிள்ளை சில்வெஸ்ரர்
[நீர்ப்பாசனப் பொறியியலாளர்]

பாசத்தின் உறைவிடமே! பண்பு நிறை பேருருவே!
மாசற்ற மனமுள்ளோய் மறைந்ததேன் மாணிக்கமே!
பாருக்குள் உன்னைப் போல் பண்பாளர் பிறப்பாரோ!
அன்புக்கு அணிகலனே ஆருயிரின் இருப்பிடமே!
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு ஒழியாது
பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பாசம் மறவாது
தூயவன் வாழ்வில் எமை சிறப்புடன் வழிநடத்தி
சீருடன் பாதுகாத்தாய் தந்தையே!
இறப்பினும் இறைவனில் நீர் இணைந்திட
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 21-1-92 காலை 6-15 மணிக்கு யாழ். அடைக்கல மாதா ஆலயத்திலும், 22 - 01 - 92 காலை 5-45 மணிக்கு யாழ். புனித யாகப்பர் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், சகோதரர்,
நண்பர்கள், உறவினர்கள்.

திருமதி றெஜீனா கிறிஸ்சோஸ்ரம்,
128, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[19407]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பயன்படுத்துவது எப்படி?

பிரிக்கப்படாத வடக்கு-கிழக்கு மாகாணத்துக்குச் சுயாட்சி அமைப்பு வழங்கப்பட வேண்டும் என்பது அமைச்சர் தொண்டமானின் சமரசத் திட்டத்தின் பிரதான அம்சம்.

அமைச்சரின் சமரசத் திட்டம் பகிரங்கப்படுத்தப்பட்டதும் அதற்குத் தெற்கில் கடும் எதிர்ப்பும், வன்மையான கண்டனமும் கிளம்பின. அவரது வாசஸ்தலத்தின் முன்னால் சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக மிரட்டப்பட்டுள்ளது. அவரைப் பதவி விலக்க வேண்டும் என்றும் அதற்காகப் பாதயாத்திரை செய்யப் போவதாகக் கூட அறிவிப்புகள் வந்துள்ளன.

இந்த எதிர்ப்புகள், ஆட்சேபங்கள், கண்டனங்கள் என்பன சிங்களப் பேரினவாத வட்டாரங்களில் இருந்தே கிளம்பின. 1957இல், 1981இல் பிரதேசசபைகள், மாவட்ட சபைகள் திட்டங்களையும் பேரினவாத சக்திகளே எதிர்த்தன. தங்களுக்குப் பக்கத் துணையாக பௌத்த மகா சங்கத்தையும் அவை சேர்த்துக் கொண்டன.

இப்போதும் பழைய உத்தியைக் கையாண்டால் தமிழர்களுக்கு உரிமை வழங்குவதைத் தடுத்துவிடலாம் என்பது பேரினவாத சக்திகளின் திட்டமாகும்.

ஆனால் தெற்கில் இருந்து கிடைக்கும் தகவல்கள், சிங்களப் பொதுமக்கள் மத்தியில் இப்போது மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கின்றன. கண்ணை மூடிக்கொண்டு சிங்களப் பேரினவாதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பின்னால் செல்லும் முந்திய வழக்கத்தை அவர்கள் சற்று மாற்றி இருக்கிறார்கள்; சிறிது மாறியிருக்கிறார்கள் என்று அறியவருகிறது.

தொண்டமான் திட்டத்தைக் கண்டதும் உருவாக்கப்பட்ட சிங்கள தேச பாதுகாவலர் இயக்கம் நடத்திய பொதுக் கூட்டங்களுக்கு இருநூறு, முந்நூறு என்றே மக்கள் சென்றிருக்கிறார்கள். முந்திய நிலையாக இருப்பின் ஆயிரம் ஆயிரமாகத் திரண்டிருப்பார்கள்.

தமிழர் பிரச்சினை—இனப் பிரச்சினை—தீர்க்கப்படவேண்டும். தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்ற மனமாற்றம் சிங்களப் பொதுமக்கள் மத்தியில் முகிழ்த்து வருவதையே இது காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இனப்பிரச்சினை நீடிப்பதால் தங்களுக்கு, நாட்டுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளையும், தாக்கங்களையும் சிங்களப் பொதுமக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள் என்று கூடக் கருதலாம் அல்லவா? குறிப்பாக தொடர்ந்து நடந்து வரும் போரின் தாக்கங்கள் அவர்களை இந்நிலைக்குத் தள்ளியிருக்கலாம்.

எனினும் சிங்கள மக்கள் மத்தியில் துளிர்த்து வரும் இந்த மனமாற்றம் வளர்வதற்குச் சிங்களப் பேரினவாத சக்திகளும், பதவி ஆசையின் நிமித்தம் அவர்களின் தாசர்களாக, அடிவருடிகளாக விளங்கும் சிங்கள அரசியல்வாதிகளும் அனுமதிப்பார்களா என்பதே பிரதான கேள்வி.

தெற்கின் பேரினவாதிகளையும், அரசியல்வாதிகளையும் எதிர்த்து நின்று சிங்களப் பொதுமக்களின் மனமாற்றத்தை ஊக்குவித்து, வளர்த்து, உறுதியாக்குவதற்கு புதிய சக்தி ஒன்று அங்கு தோன்ற வேண்டும். அது சாத்தியமாகுமா? அதனைத் தக்கவாறு பயன்படுத்த என்ன செய்யலாம் என்பதைத் தமிழ் மக்களும் சிந்திக்க வேண்டும்!

## 20 பேரைக் காணவில்லை

லண்டன், ஜன. 20

கடந்த இரண்டு மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்தது இருபது தமிழர்கள் காணாமற் போய்விட்டனர் என்று பி. பி. ஸி. நேற்று இரவு அறிவித்தது.

தேடுதல் நடவடிக்கைகளின் போது பாதுகாப்புப் படையினரால் விசாரணைக்குக் கூட்டிச் செல்லப்பட்டவர்களே காணாமல் போயினர் என்று மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஒருவர் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

## இன்று அறிவியல் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜன. 20

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினர், பாடசாலை மாணவர்களுக்கான அறிவியல் கருத்தரங்குகளை நடத்த உள்ளனர்.

இன்று திங்கள் தொடக்கம் கருத்தரங்குகள் பாடசாலைகள் தோறும் இடம்பெறவுள்ளன.

இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பின்வரும் மூன்று பாடசாலைகளில் கருத்தரங்குகள் நடைபெறும்.

இளவாலை சென். ஹென்றிஸ்— ''சூழல் மாசடைதல்'' — திரு. செ. பாலச்சந்திரன் (யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை)

சண்டிலிப்பாய் இந்து ம. வித்தி. — ''வளர்ந்து வரும் உலகமும் விஞ்ஞான தொழில் நுட்பமும்'' — திரு. மு. தில்லைநாதன் (உதவிப் பணிப்பாளர், திறந்த பல்கலைக்கழகம்)

இளவாலை மெய்கண்டான் வித்தி.— ''சார்க் நாடுகள்''— (திரு. கா. குகபாலன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்.)

[ஓ]

## சுருட்டு உற்பத்தியாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 20

சுருட்டு உற்பத்தியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

தென்பகுதிக்கு கப்பல் மூலம் சுருட்டு அனுப்ப அனுமதி கிடைத்துள்ளதை அடுத்து அதற்கான முறைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின்போது விரிவாக ஆராயப்படும் என்றும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உயர் அதிகாரியும், அரசாங்க அதிபரும் இதில் கலந்து கொள்வார்கள் என்றும் வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

(ஓ)

## வண்ணை சிவன்கோயிலில்

யாழ்ப்பாணம், ஜன. 20

வண்ணை சிவன் கோயிலில் (யாழ். திருவண்ணைநகர் அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீசுவர சுவாமி திருக்கோயிலில்) தைப்பூசத் தினமான இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

ஆலயத்துக்குச் சொந்தமான விளை நிலங்களில் நெல்மணி சேர்க்கும் (புதிர் எடுத்தல்) வழிபாடு காலை 7 மணிக்கு நடைபெறும்.

திருத்தேர் ஆரம்பத் திருப்பணிகள் நண்பகல் 12 மணிக்கு தொடக்கி வைக்கப்படவுள்ளன.

ஆலய பரிபாலன சபையின் ஆதரவில் தையல்நாயகி பாலர் பாடசாலையும், தையல்நாயகி தையற் பயிற்சி நிலையமும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. அத்துடன் சிறார்களுக்கு வித்தியாரம்பமும் இடம்பெறும்.

(ஓ)

## காலதாமதம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வின் சமரச முயற்சியில் உள்ள நன்மை தீமைகள் எப்படி இருப்பினும், பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலம் காணப்படும் அரசியல் தீர்வின் செல்லுபடியாகும் தன்மையை முற்றாக நிராகரிப்பது சகல சமூகத்தினருக்கும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென நாம் நம்புகிறோம்.

நின்று பிடிக்கக் கூடிய சனநாயக ரீதியிலான அரசியல் மாற்று வழிகளைக் கண்டுபிடிக்காது இனப் பிரச்சினை தீவிரமாக அனுமதிக்கப்படின், மீண்டும் ஒரு நாடாக கட்டியெழுப்ப முடியாதபடி எமது நாடு பிரதேசவாரியாகச் சிதறுண்டு போகும்

சகல இனங்களினதும் சனநாயக அரசியல் அபிலாஷைகளுக்கு இடம் கொடுக்கும் வாய்ப்பையும் சட்ட பூர்வ உரிமையையும் தேசியத் தலைவர்கள் தொடர்ந்து மறுத்து வந்தால் இலங்கை என்ற நாடு ஒரு முழுமையான அரசியல் அமைப்பாக இருக்குமா என்பது சந்தேகமே.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதன் தேவை குறித்துக் கருத்துடன்பாடு காணுவதற்கான அரசியல் முன் முயற்சிகளை உடனடியாக அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் எடுக்க வேண்டும்.

அப்போது தான் சகல இனங்களையும் சேர்ந்த மக்கள் மத்தியில் நம்பிக்கை உணர்வைக் கட்டியெழுப்பவும், அனைத்துத் தீவிர சக்திகளையும் அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தவும் முடியும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற கொள்கைக்கு ஆதரவாகச் செயற்படும்படி நாம் விண்ணப்பித்துக்கொள்கிறோம். — என்று கோரப்பட்டுள்ளது.

[அ-ஏ]

## இஸ்ரவேலிய அரசாங்கம் பெரும்பான்மை இழந்தது

டெல் அவிவ், ஜன. 20

பிரதமர் யிற்ஷாக் ஷமீர் தலைமையிலான இஸ்ரவேலிய அரசாங்கம் நாடாளுமன்றப் பெரும்பான்மை பலத்தை இழந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அரசுக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்கி வந்த இரண்டு சிறிய கிறிஸ்தவ தீவிரவாதக் கட்சிகள் தமது ஆதரவை விலக்கிக் கொண்டதைத் தொடர்ந்தே இந்த அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இதனால் அமெரிக்கா மற்றும் ரஷ்ய அரசுகளின் ஆதரவுடன் வாஷிங்டனில் தற்போது நடைபெற்று வரும் மத்தியகிழக்கு சமாதான மாநாடு மேலும் 6 மாதங்களுக்கு நடைபெற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் ஒன்றை இஸ்ரவேல் எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

### அடுத்த ஜனாதிபதி தேர்தலில்

## எதிர்க்கட்சிகள் சார்பில் ஆரியரத்தினா போட்டி?

கொழும்பு, ஜன. 20

சர்வோதய இயக்கத் தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்தினா அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தப்படக் கூடும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான மக்கள் ஆணையைப் பெறும் ஒரே நோக்கத்துடன் டாக்டர் ஆரியரத்தினா எதிர்க்கட்சிகள் சார்பில் நிறுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-ஏ)

### மனித உரிமை மீறல்கள்:

## பிரிட்டிஷ் நிறுவனங்கள் மீது மன்னிப்புச்சபை கண்டனம்

பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களை விற்பனை செய்து அதன் மூலம் உலகெங்கும் மனித உரிமை மீறல்களுக்கு உதவியும், ஊக்குவிப்பும் வழங்கியதாக சில பிரிட்டிஷ் நிறுவனங்கள் மீது சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை ''அடக்குமுறை வர்த்தகம்—பிரிட்டிஷ் லிமிட்டெட்'' என்ற தலைப்பின் கீழ் இந்த அறிக்கையை சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டது.

தூக்குமேடை உபகரணங்கள், கால் விலங்குகள், மின்சார சித்திரவதைக் கருவிகள் ஆகியவற்றை பிரிட்டிஷ் நிறுவனங்கள் விற்பனை செய்த சில சந்தர்ப்பங்களை இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

(த-எ)

## லலித் கட்சியின் கூட்டத்தில் எஸ். டி. பண்டாரநாயக்கா

கொழும்பு, ஜன. 20

கம்பஹா மாவட்ட முன்னாள் எம். பியும், பகுஜன நிதாஹஸ் பெரமுன தலைவருமான திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற புதிய அரசியல் கட்சி நடத்திய பிரசாரக் கூட்டத்திற்கு சமுகமளித்தார்.

கம்பஹாவில் அக்கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்காவுடன் திரு. பண்டாரநாயக்காவும் மேடையில் கூட்டம் முடிவடையும் வரை அமர்ந்திருந்தார்.

[த-எ]

## தொண்டாவுக்கு.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு விமானக் குண்டுகளை வீசுகிறது; ஆனால் புலிகளை விட அப்பாவி பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர்; பெறுமதிமிக்க அதிக உயிர்கள் பலியாகுகின்றன. இதனைப் பெரும்பான்மை இன மக்கள் உணரவேண்டும்.

நாட்டில் ஐக்கியம், சுபீட்சம், அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே யாழ். சென்று புலிகளுடன் சமரசம் பேச நான் தயாரானேன்.

ஆனால் குறுகிய மனப்பான்மை கொண்ட சில சக்திகளும், அரசியல் லாபம் பெற முயலும் சில பிற்போக்குவாதிகளும் இதற்குத் தடையாக இருக்கிறார்கள். அமைதிக்காக உழைக்க முன்வந்த எனக்கு இன்று பயமுறுத்தல், எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு யுத்தத்தால் மதிப்புமிக்க உயிர்கள் பலியாகுகின்றன. நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து வருகிறது. தாய் நாட்டில் பற்றுள்ளவர்கள் இவற்றைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க முடியாது — என்றும் அவர் சொன்னார்.

(உ-த)

## சுழிபுரத்தில் கும்பாபிஷேகம்

சுழிபுரம், ஜன. 20

சுழிபுரம் கதிர்வேலாயுத சுவாமி (பெரிய தம்பிரான்) ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை [24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதனையொட்டி கிரியைகள் இன்று ஆரம்பமாகின்றன. இன்று தொடக்கம் மேற்படி ஆலயத்தில் பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி ''வேலனை வணங்கிடுவோம் வேதனை தீர்த்திடுவோம்'' என்னும் பொருள் பற்றி ஐந்து நாட்களுக்கு கதாப்பிரசங்கம் செய்வார்.

மகா கும்பாபிஷேக தினத்தன்று சிறப்பு விருந்தினராக சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்து கொள்வார்.

[அ-28]

## சம்பள உயர்வு கோரி தொழிற்சங்க நடவடிக்கை

ஊழியர்களின் ஆகக் குறைந்த மாதச் சம்பளம் ரூபா 3,000 ஆக அதிகரிக்கப்பட வேண்டுமெனவும், வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூபா 5 வீதம் வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்பட வேண்டுமெனவும் கோரி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தின் செயற்குழு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

[த-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாலய நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சாரணர்கள் அன்பளிப்பாக வழங்கவுள்ளனர். நூல்களை வழங்கும் வைபவம் இன்று காலை 10 மணிக்கு திருஞானசம்பந்த வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (உ-5)

# மரண அறிவித்தல்கள்

## முத்தையா

சங்கானை மடத்து முத்தையா அவர்கள் 19-1-1992 இல் சிவபதமடைந்தார். அன்னார் காலம்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலம்சென்ற இலகுப்பிள்ளை-சேதுப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும், காலம்சென்றவர்களான உமையம்மா, பொன்னம்மா, வைத்திலிங்கம் [தம்பிரான் சிதம்பரம் மடம்], அம்பலவாணர் ஆகியோரின் சகோதரரும், தியாகராசா [ஆசிரியர், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி], தேவராசா [தொழில் நுட்பப் பொறியியலாளர், R. V. D. B] ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, மல்லிகாதேவி ஆகியோரின் மாமனாரும், மணிமேகலை, சத்தியேந்திரா, கேசவன், தயான், பன்னீர்ச்செல்வன், ஆதவன், கமலாயினி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-1-1992 திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் சங்கானையில் நடைபெறும்.

தகவல்:
மு. தியாகராசா
[மகன்]

மடம்,
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
(19414)

## சிவசம்பு இராசையா

காரைநகர் சந்தம்புளியடியைச் சேர்ந்த சிவசம்பு இராசையா [உரிமையாளர், லிங்கம் ஸ்ரோர்ஸ், முள்ளியவளை] கடந்த 16ஆம் திகதி முள்ளியவளையில் காலமானார். அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசம்பு — சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை அன்னம்மாவின் மருமகனும், மனோரஞ்சிதம், காலஞ்சென்ற கணேசலிங்கம், சண்முகலிங்கம் [France], அமிர்தலிங்கம் [Swiss], சத்தியலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், நா. சிவபாலனின் [கொழும்பு] அன்பு மாமனாரும், பாலேந்திரன், மகேந்திரன், சிவசாந்தினி ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற அருளப்பா, தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம், பூமணி ஆகியோரின் மைத்துனரும், கந்தமூர்த்தியின் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-01-92 அன்று முள்ளியவளையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ம. சிவபாலன்
[மகள்]

பிரசாத் வீதி,
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.
[9402]

## கபிரியேல் இராயப்பு
### [வசாவிளான்]

பலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய க. இராயப்பு 19-1-1992 அன்று காலமானார்.

இவர் மரியம்மாவின் அன்புக் கணவரும், பாலசுந்தரம், அருளானந்தம் [சுவிஸ்], மேரிபுஸ்பம், நேசமணி, யேசுதாசன் [சவூதி], டேவிட், றீற்றா, வசந்தி [நோர்வே] ஆகியோரின் அன்பு தந்தையும், ஆரோக்கியநாதர், செல்வா, மார்க்கிரேற் [நோர்வே], மரியகொறற்டி, ஜெபரட்ணம் [சுவிஸ்], செல்வம் [நோர்வே], யோண்சன் [சுவிஸ்], அனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சூ. ஆரோக்கியநாதர்
[மருமகன்]

இல. 2,
றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
(19415)

## சுகாதாரக் கருத்தரங்கு

வட்டுக்கோட்டை, ஜன. 20

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சங்கானை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறும். [த]

## மக்கள் மயம்

அப்பாறை இ. போ. ச. டிப்போ எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி மக்கள் மயப்படுத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

## கூட்டணி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் அமையும் இந்தக் கூட்டணியில்—

மக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஈ. பி. ஆர். எல். எப், தமிழ் காங்கிரஸ், லிபரல் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, பகுஜன நிதாஹஸ் பெரமுன ஆகிய கட்சிகள் அங்கம் வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## சட்டத்தரணி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஐ. தே. க அதிருப்தியாளர்களை அக்கட்சியின் செயற்குழு வெளியேற்றியதைத் தொடர்ந்து, உயர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணையின்போது, இக்குற்றச்சாட்டை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுவிட்டது என்று அரசாங்க வட்டாரங்கள் சுட்டிக்காட்டி உள்ளன.

நீதிபரிபாலனச் சட்டத்தின்படி —

ஏமாற்றுதல், தவறான நடத்தை மற்றும் குற்றச்செயல் தொடர்பாக மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்றக்குழு ஒரு சட்டத்தரணியைக் குற்றவாளியாகக் காணுமானால் சட்டத்தரணிகள் பட்டியலிலிருந்து அச்சட்டத்தரணியின் பெயரை நீக்க முடியும்.

அப்படியான குற்றச்சாட்டுக்கு இலக்கான ஒரு சட்டத்தரணிக்கு எதிராக, அவரை சட்டத்தரணிகள் பட்டியலில் இருந்து நீக்கும்படி கோரும் மனு ஒன்றை எவரும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சாதாரண சட்ட நடைமுறை இடமளிக்கின்றது.

அப்படியான மனுக்களில் உள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. [உ-எ]

## வளலாயில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

றும், 7.62 ரக நடுத்தர ரவைகள் நூறும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது அயற் பகுதி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர் என்று எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர். [ஒ-165-11]

## பலாலி, காரை ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் மகாசங்கத்தினர் பார்வையிட்டனர்.

இந்தக் குழுவினர், வவுனியா மற்றும் அனுராதபுரம் பகுதிகளுக்கும் விஜயம் செய்தனர். (உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் [illegible] இல் 20-1-1992இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## முக்கிய அறிவித்தல்

தைப்பூச நன்னாளிலே

### மீண்டும் பிறின்ஸ்

இன்று முதல் பிறின்ஸ் ஸ்ருடியோ ஸ்தாபனம் பழைய பிறின்ஸ் ஸ்ருடியோ முன்பாக மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

சுன்னாகம். — நிர்வாகி

[சி-1347]

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
### யாழ்ப்பாணம்.

## ஆண்டு-6 அனுமதிப் பரீட்சை-1992

ஆண்டு 6 அனுமதிப் பரீட்சையில் 115 புள்ளிகளுக்கு மேல் பெற்று, அனுமதிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் 22-01-1992 ஆம் திகதி 9-00 மணிக்கு பிந்தாமல் வந்து தங்களது இடத்தினை உறுதிப்படுத்துமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

திருமதி தி. நாகராசா,
அதிபர்.

[சி-1345]

கடவுள் துணை

## அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

**இச்சங்கம், 1993ஆம் ஆண்டு தொடக்கம் நிவாரண புனர்வாழ்வு, புனர்நிர்மாண பணிகளில் ஈடுபட திருவருள் பாலித்துள்ளது.**

இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் பின்வரும் விலாசங்களில் தங்களது அங்கத்தவர் இலக்கம், தற்போதைய சரியான விலாசம் ஆகிய விவரங்களை கடித மூலம் அறியத்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

1. **யாழ்ப்பாண மாவட்டத்தில் தங்கியிருப்போர்:**
   திரு. சி. க. வேலாயுதபிள்ளை, C/o சர்வோதயம், 22, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
2. **கிளிநொச்சி மாவட்டத்திலிருப்போர்:**
   திரு. கா. நாகலிங்கம், 111, உருத்திரபுரம்.
3. **கீழ் மாகாணத்தில் தங்கியிருப்போர்:**
   திரு. பொ. கந்தையா, தனசக்தி, திருகோணமலை.
4. **ஏனைய மேல் மாகாணம், மலையகத்தில் தங்கியிருப்போர்:**
   டாக்டர் க. வேலாயுதபிள்ளை, 3, வில்லி அவென்யூ, கொழும்பு-6.

எல்லா சங்கத்தவர்களும் தொடர்பு கொண்டு ஒத்துழைப்புத் தாருங்கள். 1992 நடுப்பகுதியில் இச்சங்கத்தின் 43ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சி. க. வேலாயுதபிள்ளை,
சங்கத் தலைவர்.

19-01-1992
[19408]

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பையா செல்லமுத்து

சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திருமதி தம்பையா செல்லமுத்து 18-01-1992 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற முத்துத்தம்பையாவின் அன்பு மனைவியும், பத்மநாதன், காலஞ்சென்ற கைலாயநாதன், குணரட்ணம், ஆறுமுக வடிவேல், சரஸ்வதி, புவனேஸ்வரி, யோகாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகம்மா, அமிர்தா, சரஸ்வதி, சாந்தி, சிவயோகன், யோகராஜா, செல்வராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [20-01-1992] காலை 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி சரஸ்வதி சிவயோகன்,
(மகள்).

சுதுமலை வடக்கு,
தங்கை ஒழுங்கை,
மானிப்பாய்.
[9401]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org